பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

27 07 2026 MONDAY 6.30 PM

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- தீவிரவாதத்தை ஒடுக்கியதில், மத்திய ரிசர்வ் காவல்படையினர் முக்கியப் பங்கு வகித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- தமிழகத்தின் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 390 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- உள்துறை செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு விஜய் இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.
- கரூர் கூட்டநெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கிய உத்தரவினை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ரத்து செய்துள்ளது.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில், நீளம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் மற்றும் லோகேஷ் சத்தியநாதன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இனி விரிவான செய்திகள் --

<<<<<<>>>>>

தீவிரவாதத்தை ஒடுக்கியதில், மத்திய ரிசர்வ் காவல்படையினர் முக்கியப் பங்கு வகித்ததாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இப்படையின் நிறுவன தினத்தை முன்னிட்டு இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் பணிகளில் மட்டுமின்றி, மக்களுக்கு சேவையாற்றுவதிலும் இப்படையினர் இன்றியமையா பங்கு வகித்து வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்காக 390 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மாமல்லபுரம் கடற்கரை கோவில் பகுதியில் 30 கோடி ரூபாய் செலவில் மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக கூறினார்.

ராமேஸ்வரத்தில் ஆன்மிக சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில், உள்துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

சட்டம் – ஒழுங்கு சூழல் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மாநில அமைச்சர்கள் திரு விஜய் தமிழன்பன், திரு மரியவில்சன், மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதனைத்தொடர்ந்து, கோயம்பேட்டிற்கு சென்ற முதலமைச்சர் திரு விஜய், அங்குள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<>>>>>

தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க வேண்டும் என்பதில் தவெக அரசு உறுதியுடன் உள்ளதாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு முகமது பர்வேஸ் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொழில் வளர்ச்சியில் மட்டுமின்றி, தொழிலாளர் நலனிலும் முன்மாதிரி மாநிலமாக தமிழகத்தை உருவாக்க அனைவரும் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

தவெக அரசின் கைது நடவடிக்கைகளுக்கு திமுக அஞ்சாது என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ள திமுக சட்டப்பேரவை உறுப்பினர் திரு மார்கண்டேயனை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அரசுக்கு எதிராக விமர்சனம் செய்பவர்கள் மீது கைது நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏற்புடையது அல்ல என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் குடிநீர் பற்றாக்குறை பிரச்சினைக்கு தீர்வுகாண உறுதியான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பெரும்பாலான மாவட்டங்களில் குடிநீர் பற்றாக்குறையால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மாநில நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 90 முக்கிய அணைகளில் 50-க்கும் மேற்பட்ட அணைகள் வறண்டுவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல மாவட்டங்களில் பத்து நாட்களுக்கு மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு ஏதுவாக சிறப்பு நிதியை மாநில அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

கரூர் கூட்டநெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கிய உத்தரவினை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ரத்து செய்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு சி வி கார்த்திகேயன், திரு ஆர் சக்திவேல் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

அரசின் கொள்கை முடிவாக இருந்தாலும், பணி நியமனத்திற்கான நெறிமுறைகள் இதில் பின்பற்றப்படவில்லை என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு பேருந்து விபத்து மற்றும் பட்டாசு வெடி விபத்துத்துகளில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப்பணி வழங்கப்படாததும் அந்த உத்தரவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்த கூடாது என்ற அடிப்படையில் அரசுப்பணி வழங்கும் உத்தரவு ரத்து செய்யப்படுவதாகவும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 31 பேரின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கப்பட்டதை எதிர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

<<<<<<>>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் பளுதூக்கும் பிரிவில் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி வெள்ளிப்பதக்கம் வென்றது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஒலிம்பிக் போட்டியிலும் இவர் பதக்கம் வெல்ல வேண்டும் என்பதே தங்களது விருப்பமாகும் என்று அவரது சகோதரர் சுரேஷ் குமார் எமது செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(Sound Byte – சுரேஷ் - 49 Sec.)

தங்கள் மகனின் இந்த சாதனை, தொடர் முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்று அவரது தாயார் பேச்சியம்மாள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(Sound Byte –பேச்சியம்மாள் - 29 Sec. )

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – வி ஆர் துரை – 39 Sec. )*

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று மாலை பரவலாக மழை பெய்தது.

<<<<<<>>>>>

## மாவட்டச் செய்திகள்

விருதுநகர் மாவட்டம் செங்கமலப்பட்டியில் அனுமதி பெறாமல் இயங்கிவந்த பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் நிவாரண உதவியை மாநில அரசு அறிவித்துள்ளது.

----------------

சேலம் மாவட்டத்தில் உள்ள பத்து ஊராட்சிகளில் பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையில், ஆறு கோடி ரூபாய் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக வேளாண்துறை இணை இயக்குநர் திரு சீனிவாசன் கூறியுள்ளார்.

------------------

மதுரை மாவட்டத்தில், மக்கள் குறைதீர் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா அறிவுறுத்தியுள்ளார்.

------------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு ரவிகுமார் இன்று வழங்கினார்.

---------------

கடலூர் மாவட்டத்தில் நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் மேற்கொள்ளப்பட உள்ள எயிட்ஸ் விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றனர்.

--------------

Puri -யிலிருந்து, போத்தனூருக்கு இன்றிரவு மணி 10.45-க்கு சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் நீளம் தாண்டுதல் பிரிவில் இந்தியாவின் முரளி ஸ்ரீசங்கர் மற்றும் லோகேஷ் சத்தியநாதன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் 200 மீட்டர் நீச்சல் பிரிவில் Sajan Prakash இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

110 மீட்டர் தடை ஓட்டத்தில் Tejas Shirse இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 100 மீட்டர் பாரா நீச்சல் பிரிவில் Swatik Patil-ம் இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆடவர் குத்துச்சண்டை பிரிவில் Sachin Siwach காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்று புதுதில்லி திரும்பிய Jhandu Kumar-க்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

-----------------

பிலிப்பைன்ஸின் மணிலாவில் நடைபெற்ற சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Daksh Kukreti பட்டம் வென்றார்.

<<<<<<END>>>>>